<u>சார்பு நீதிமன்றம், அவிநாசி</u>
**MCOP No. 12/2019**

**நாள் : 06.08.2024**
**PW1 : சுகந்தி**
**க/பெ : முத்துராஜ்**
**<u>3–ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை :</u>**

நான் டெய்லராக வேலை செய்கிறேன். விபத்து சமயத்தில் எனக்கு வயது 32 ஆகும். விபத்து நடந்த சாலை கிழமேல் சாலையாகும். விபத்து சாலையின் வடபுறம் நடந்தது என்றால் சரிதான். அந்த ரோட்டுக்கு வடபுறம் தான் பெருமாள் கோவில் இருக்கிறது என்றால் சரிதான். அந்த சாலை வளைவான சாலை என்றால் சரிதான். அந்த இடத்தில் பேருந்து நிறுத்தமும், வேகத்தடையும் இருக்கிறது என்றால் சரிதான். வேகத்தடையை தாண்டி விபத்து 100 அடி துூரத்தில் நடந்தது என்றால் அவ்வளவு துூரம் இருக்காது. சுமார் 10 அடி தொலைவில் இருக்கும். 1–ம் எதிர்மனுதாரரின் வாகனம் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வடபுற ஓரத்தில் வந்தது என்றால் சரிதான். நான் கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி ரோட்டின் வலது புரத்தில் எதிர் திசையில் சென்று கொண்டிருந்தேன் என்றால் சரிதான். 1–ம் எதிர்மனுதாரர் ஓட்டி வந்த வாகனம் சரியான திசையில் வந்தது என்றால் சரியல்ல. அந்த இருசக்கர வாகனம் சரியான திசையில் தான் வந்தது என்றாலும் நான் தான் எதிர் திசையில் தவறாக சென்று விபத்தை வரவழைத்து கொண்டேன் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.4–ல் காயச்சான்றிதழில் எனக்கு எந்தவிதமான காயங்கள் ஏற்பட்டுள்ளது என்று குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. நான் மருத்துவமனையில் இருந்து பூரண குணமாகித்தான் விடுவிக்கப்பட்டேன் என்றால் சரியல்ல. கட்டு பிரிக்காமல் அனுப்பினார்கள். அதன் பிறகு ஒருவாரம் கழித்து கட்டு பிரித்தார்கள். நான் ஒருமாதத்தில் பூரண குணமாகி விட்டேன் என்றால் சரியல்ல. சரியாக நடப்பதற்கு 3 மாதங்கள் ஆகி விட்டது. நான் செக்கப் செய்து கொள்வதற்காக 3 அல்லது 4 முறை KMCH மருத்துவமனைக்கு சென்றேன். எனக்கு உலோக தகடு பொருத்தப்பட்டுள்ளது அதற்காக செக்கப் செய்து கொள்வதற்காக போனேன். மறுசிகிச்சை செய்து கொண்டதற்கான ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றாலும் மறுசிகிச்சை செய்து கொண்டதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. ம.சா.ஆ.5

ஆவணத்தில் 1ம் எதிர்மனுதாரர் / வாகன ஓட்டுநருக்கு உரிய வாகன ஓட்டுநர் உரிமம் இல்லை என்று சொல்லப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. முதல் தகவல் அறிக்கை 1 நாள் காலதாமதமாக பதிவு செய்யப்பட்டதற்கான காரணத்தை நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. விபத்து முழுக்க முழுக்க என்னுடைய கவனக்குறைவால் ஏற்பட்டுள்ளது என்றாலும், 1-ம் எதிர்மனுதாரர் விபத்திற்கு எந்த விதத்திலும் காரணமில்லை என்றாலும் சரியல்ல. 2-ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு விதிகளை மீறியுள்ளதால் 3-ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனம் எனக்கு எவ்வித இழப்பீடும் கொடுக்க கடமைப்பட்டவர் இல்லை என்றால் சரியல்ல. அதிக இழப்பீடு பெற வேண்டி மருத்துவ ரசீதுகளை மிகைப்படுத்தி தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. 3-ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை : இல்லை.**

*Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.*

Sd/-S.Indulatha, B.A., B.L.,
Subordinate Judge,
Avinashi.